விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 7 ஐ. ஆகிர் 25 இதழ் 66

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 20—4—82

### நாளை ஆரம்பமாகும் இந்து மாநாடு:

## வெளிநாட்டு பிரதிநிதிகள் அதிக அளவில் வருகை

(கொழும்பு)

நாளை ஆரம்பமாகும் ஐந்து நாள் உலக இந்து மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, வெளிநாடுகளிலிருந்து அதிகமான பிரதிநிதிகள் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர். ஏனையோர் இன்று வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா, மலேசியா, ஜப்பான், இத்தாலி, அமெரிக்கா, நேபாளம், இந்தோனேஷியா, மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி, பர்மா, குவைத் ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் நேற்று கொழும்பு வந்துசேர்ந்தனர்.

இதற்கிடையே மகாநாட்டு ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு, நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதல்நாள் நிகழ்ச்சிகளிலும் இறுதிநாள் நிகழ்ச்சிகளிலும் அழைப்பாளர்கள் மாத்திரமே பங்குபற்றலாம் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

# சிறிமா தலைமையில் ஐக்கிய மேதின விழா!

## சமசமாஜ, கம்யூ. கட்சிகள் கலந்துகொள்ளும்

(நமது சிறப்பு நிருபர்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில், ஐக்கிய மேதின விழா கொழும்பில் நடைபெறும். இவ்விழாவில், கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சியும், திரு. அனில் முனசிங்காவின் தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சியும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் கலந்து கொள்ளும்.

மே தினவிழா ஏற்பாடு சம்பந்தமாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சி நேற்று ஆலோசனைக் கூட்டமொன்றை நடத்தியது. இக்கூட்டத்துக்குச் சமுகமளிக்குமாறு சகல எதிர்க்கட்சிகளும் அழைக்கப்பட்டிருந்தன.

இக்கூட்டத்தில் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா தலைமையிலான லங்கா சமசமாஜகட்சி கலந்து கொள்ள மாட்டாது என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டபோதிலும், சமசமாஜ கட்சியில் பிளவுபட்ட இரு கோஷ்டியின

(2ம் பக்கம் பார்க்க)

### இளம்பெண் மர்ம மரணம்:

## மரணவிசாரணை இன்று தொடர்ந்து நடைபெறும்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான விடுதியில் மர்மமான முறையில் மரணமான இளம்பெண்ணின் மரணம் குறித்து இன்று தொடர்ந்தும் விசாரணை நடைபெறும்.

இப் பெண்ணின் மரணம் குறித்து நடைபெற்ற மரண விசாரணையை இடைநிறுத்தம் செய்த யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் நேற்று தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டார்.

நேற்று நடைபெற்ற விசாரணையில் இறந்த பெண்ணின் கணவர் சாட்சியமளித்தார்.

சம்பவம் நடைபெற்றபோது குறிப்பிட்ட வீட்டில் தங்கியிருந்த ஒருவர் வைத்திய பரிசோதனைக்குள்ளாக வேண்டும் என்று உத்தரவிட்ட நீதவான் இன்றுவரை விசாரணையை ஒத்திவைத்தார்.

யாழ். சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் நேற்றுச் சமர்ப்பிக்கப்படவில்லை.

சம்பவதினம் வீட்டிலிருந்தவர் இன்று சாட்சியமளிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுதுறது.

## குற்றச்செயல்கள் மிகக்குறைவு

[கொழும்பு]

கடந்த சில வாரங்களாக குற்றச்செயல்கள் நாட்டில் வெகுவாகக் குறைந்துள்ளதாகப் பொலிசார் கருதுகின்றனர்.

### புகையிரத

## பாதுகாவலர் திடீர் வேலைநிறுத்தம்

[கொழும்பு]

புகையிரத பாதுகாவலர்கள் (கார்ட்)நேற்று மேற்கொண்ட திடீர் வேலை நிறுத்தத்தினால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

மருதானை ரயில் நிலையத்தில் ரயில் பாதுகாவலர் ஒருவர், டிக்கட் கருமபீடத்தில் இருபது ரூபாவுக்குச் சில்லறை கேட்டதாகவும், அதனைத் தொடர்ந்து வாக்குவாதம் மூண்டு தாக்குதல் இடம்பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இதன் எதிரொலியாக நேற்றுக் காலை ஒன்பது மணி முதல் பகல் ஒன்றரை மணி வரை புகையிரத பாதுகாவலர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

இந்த வேலைநிறுத்தம் பின்னர் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்டது.

### "சிறுபான்மை சமூகத்தலைவருக்கும்

## கூட்டணியில் கூட்டுத்தலைமைப் பதவி வேண்டும்!"

### இராசலிங்கம் கோருகிறார்

[கரவெட்டி]

"சிறுபான்மைத் தமிழர்களுக்கெனத் தனியான இயக்கமொன்று உருவாக்கப்படவேண்டிய அவசியமேற்பட்டுள்ளது. இச் சிறுபான்மைத் தமிழர் இயக்கத்தை, தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொண்டு, அதன் தலைவருக்கு தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளுக்கு வழங்கப்பட்டதைப் போன்று கூட்டுத் தலைமைப் பொறுப்பு வழங்கப்படவேண்டும். சிறுபான்மைச் சமூகமக்கள் தங்களின் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமானால் அரசியல் தலைவர்களின் தயவிலோ, கட்சிகளின் தயவிலோ தங்கியிருக்க முடியாது".

மேற்கண்டவாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த.இராசலிங்கம் உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலைய நான்காவது மெய்வல்லுநர் போட்டிப் பரிசளிப்பு விழாவிலும், பாரதி விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் சுட்டிக்காட்டினார்.

திரு. இ. சபாரத்தினம் தலைமையில் இவ்விழா உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில்நடைபெற்றது. உடுப்பிட்டி எம். பி திரு த. இராசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:–

"தமிழ் இனத்தின் ஏகோபித்த இயக்கமாகத் தமிழர் விடுதலைக்கூட்டணி விளங்குகின்றது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு தொண்டமானையும், கூட்டுத் தலைமையின் கீழ் ஏற்றே தமிழர்விடுதலைச்கூட்டணி அமைக்கப்பட்டது. சிறுபான்மைச் சமூக இயக்கத் தலைவருக்கும், திரு. தொண்டமானுக்கு இடமளிக்கப்பட்டதுபோலக் கூட்டுத்தலைமை அந்தஸ்து வழங்கப்பட்டுச் சிறுபான்மைச்சமூக மக்களையும் கௌரவிக்கவேண்டும்.

"பாராளுமன்ற உறுப்பினர் தேர்தலின்போதும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டியது அவசியம்.

"இந்த நாட்டில் சிறுபான்

(8ம் பக்கம் பார்க்க)

## "சமத்துவ உறுதிப்பாட்டை நிலைப்படுத்தியவன் பாரதி!"

### நயினை விழாவில் காவலூர் எம். பி.

(நயினாதீவு)

"பாரதியின் உள்ளம் ,விசையுடைய பந்துபோல் எட்டுத்திக்கும் சமதர்ம சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டது. எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற சமத்துவத்தைக் காட்டி சரிநிசர் சமானமாக வாழ்கின்ற நிலையை ஏற்படுத்திய பெருமையும் அவனையே சாரும். எல்லாருக்கும் எல்லாச் செல்வமும் கிடைத்துவிட்டால் எல்லாரும் சமத்துவத்தினரே என்று கூறியது மட்டுமின்றி அதனை உறுதிப்படுத்திய உத்தமனும் அவனே. நெஞ்சில் உரமவேண்டும் என்று பாட்டிசைத்த பாரதி 'சாதிகள் இல்லையடி பாப்பா' என அன்றைய சமுதாயத்தின் மத்தியில் பாடி சமத்துவத்தின் உறுதிப்பாட்டை நிலைப்படுத்தினன்."

நயினை மணிபல்லவ கலாமன்றத்தின் 20 வது ஆண்டு நிறைவுவிழாவில் ஆசியுரை வழங்கிய காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ இரத்தினம் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார். மன்றத் தலைவர் திரு கே. கே. சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பண்டிதர் மேலும் பேசுகையில்,

அன்றைய சமுதாயத்தின் மத்தியில் வேர் கொண்டிருந்த மூடக்கொள்கைகளை வேருடன்

(8ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் நடிகரின் புதுமை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நாடகம் என்றால் நடிகர்கள், மேடை அலங்காரங்கள், ஒளி அமைப்புகள் என்று எண்ணுபவர்களுக்குப் புதுமையான அனுபவம் ஒன்று காத்திருக்கின்றது இம்மாதம் 26 திகதி.

அன்றைய தினம் மாலை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில், பிரையன் டி. பார்ன்ஸ் பல்வேறு பாத்திரங்களாக மேடையில் தோற்றமளிக்கவிருக்கின்றார்.

'பழைய, புதிய கதைகள்' என்ற பொதுத் தலைப்பில் இந்த நாடக அற்புதத்தை இப்பிரபல பிரிட்டிஷ் நடிகர் நிகழ்த்தவுள்ளார்.

இவருடைய இலங்கை விஜயம் பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

### மணிவாக்கு

''எத்தனை வருடங்கள் வாழ்ந்தாய் என்பதல்ல, இத்தனை வருடங்களாக எப்படி வாழ்ந்தாய் என்பதே முக்கியம்.'' —அட்லாஸ் ஸ்டீவன்சன்

# நமது நோக்கு

## போக்லண்ட் தீவுகள் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு

கடந்த ஏழாம் திகதி நாம் போக்லண்ட் தீவுப் பிரச்னை தொடர்பாக இப் பத்திகளில் எழுதும்போது இன்னும் இருவாரங்களில் [அதாவது இன்றைய தினம்] தென் அத்லாண்டிக் சமுத்திரப் பிரதேசம் கடும் போரினால் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்குமென்று அஞ்சுவதற்கான சூழ்நிலை இருந்தது.

ஆனால் அப்படியான நேரடி மோதல் எதுவும் தெய்வாதீனமாக இதுவரைக்கும் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் இல்லை. இருந்தபோதும் போருக்கான 'தயார்' நிலையில் எதுவித மாற்றமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள் போக்லண்ட் தீவுகளை நோக்கிப்போய்க்கொண்டே இருக்கின்றன. அங்கு 200 மைல் 'போர் வலயம்' ஒன்றை ஏற்கனவே பிரிட்டின் பிரகடனப்படுத்தியுள்ளது. அதேசமயம் இந்தப் பிரதேசத்திலிருந்து எல்லா சப்பல்களும் வெளியேறிவிடவேண்டும் என்று ஆர்ஜன்டீனா அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளதுடன் தனது போர்க்கப்பல் அணியொன்றையும் அப்பிரதேசத்தை நோக்கியனுப்பியுள்ளதாம். எனவே அங்கு எந்த நிமிடமும் போர் அபாயம் இருந்தே வருகின்றது. போர் ஏற்படும் பட்சத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகள் பலவும் ஆர்ஜன்டீனாவின் பக்கமாக நின்று போரிட சன்னதம் பூண்டுள்ளன. பிரிட்டனைப் பொறுத்தவரை இது ஒரு பலப்பரீட்சையாக மட்டுமல்ல, ராஜதந்திரபோராட்டத்தோடு ''விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை'' என்ற வகையில் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கான போராட்டமாகவும் உருவெடுத்துள்ளது. அதை விட போக்லண்ட் தீவுகளில் குடியேறியுள்ள பிரிட்டிஷ் பிரஜைகளின் உயிர்—உடமைகளுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் நிலைமையைச் சமாளிக்கவேண்டிய தர்ம சங்கடமான நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

கடைசியாக நமக்கு கிடைத்துள்ள செய்திகள் சற்று ஆறுதல் அளிப்பதாகவுள்ளன.

யுத்த தவிர்ப்பு முயற்சியில் இறங்கியுள்ள அமெரிக்க ராஜாங்க அமைச்சர் அலெக்சாண்டர் ஹேக் தாயகம் திரும்பும் யோசனையைஒத்தி போட்டுவிட்டு முயற்சியை தொடர்ந்து நடத்த தீர்மானித்துள்ளார். பிரிட்டன் அனுப்பியுள்ள கடற்படையைபோக்லண்ட் தீவுப்பகுதியிலிருந்து அகற்றுமானால் அத் தீவுகளில் ஆக்கிரமித்துள்ள தனது படைகளை வாபஸ் பெறுவதற்கு ஆர்ஜன்டீனா அதிபர் லியப் போல்டோ கால்ட்டீரி இணங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

பிரிட்டன் இதற்கு ஒத்துக்கொள்ளுமா என்பது தெரியவில்லை.

பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணும் வரை அத்தீவுப் பிரதேசத்தை இருதரப்பும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு பாதுகாப்பு ஏற்பாட்டின் கீழ் வைத்துவிட்டு போர் முழக்கத்தை வாபஸ் பெற்றுக் கொள்வதே நெருக்கடியை இப்போதைக்குத் தணித்துக்கொள்வதற்கான உசித மார்க்கம். அந்த வகையில் திரு ஹேக் ஒரு யோசனையை ஏற்கனவே முன்வைத்திருக்கிறார். பிரச்னைக்குத் தீர்வுகாணும்வரை போக்லண்ட் தீவுகளை பிரிட்டன் — ஆர்ஜன்டீனா— அமெரிக்கா ஆகிய மூன்று நாடுகளினதும் பாதுகாப்பில் விடலாம் என்பதே அந்த யோசனை. ஆனால் ஆர்ஜன்டீனா இதனை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லையென்று தெரிகின்றது.

பிரிட்டன் மாபெரும் கடல்வல்லரசாக விளங்கிய காலத்தில் தான் கைப்பற்றிக்கொண்ட நாடுகளையெல்லாம் ''கொலனி''களாக்கி ஆங்காங்கே தனது வியாபார — பொருளாதார சுரண்டல்களின் நிமித்தம் தான் விரும்பியவாறெல்லாம் குடியேற்றங்களை ஊக்குவித்தது. அவ்வாறே பல நாடுகளிலும்குடியேறிய பிரிட்டிஷ்காரர்கள் அந்த நாடுகளின் சுதேசிகளைப் புறக்கணித்துவிட்டு ஆட்சிப் பொறுப்பிலும்அமர்ந்து கொண்டனர். காலமாற்றத்தினால் பிரிட்டனின கடல்வல்லமை குறையவும் குடியேற்றநாடுகளில் சுதந்திர வேட்கை அதிகரிக்கவும் சில நாடுகளிலிருந்து அது விலகநேர்ந்தது. அவ்வாறே விலகிய போதும் சுதந்திரம் பெற்ற நாடுகள் தமக்குள்ளேயே பூசல்பட்டுக்கொண்டு இருக்கும் வகையில் சில பிரச்னைகளையும் விடுத்தே சென்றுள்ளது. இந்தியா பாகிஸ்தானுக்கிடையில்காஷ்மீர் பிரச்னையும் இலங்கை இந்தியாவுக்கிடையில் இந்திய வம்சாவளியினர்பிரச்னையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இவ்வாறுதான் சுமார் ஏழாயிரம் மைல்களுக்கப்பால் தென் அமெரிக்காவுக்கு அருகில் 150 ஆண்டுகளுக்குமுன் கைப்பற்றிய மனிதசஞ்சாரமற்ற போக்லண்ட் தீவுகளில் தனது மக்களையே குடியமர்த்தி தனது ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டது. ஆர்ஜன்டீனாவும் அப்போது ஒரு கடல்வல்லரசாக இருந்திருப்பின் இன்று இந்தப் பிரச்னை எழுவதற்கு வாய்ப்பே இல்லாமல்போயிருக்கும்.

இன்றைய நிலைமை இரு நாடுகளுக்குமே சாதகமாக இருப்பதாக நாம் கருதவில்லை.

ஒரு நாட்டின் மீது உரிமை கொண்டாடுவதற்காக முகாந்திரமின்றி படைபலத்தை உபயோகித்து அந்நாட்டில்போய் குந்திக் கொள்வது ஆர்ஜன்டீன ராணுவ அரசுக்கு உகந்ததாய் இருக்கலாம் அதனால் விளையும் ஆபத்துக்களை முழுஉலகுமே அனுபவிக்க வேண்டியிருக்கும்.

எனவேதான் சிக்கலாகியுள்ள போக்லண்ட் தீவுகள் பிரச்னையில் ஐ. நா. நேரடியாகத்தலையிட்டு இரு தரப்புக்கும் உகந்ததோர் தீர்வினை ஏற்படுத்த வழிவிட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

மொத்தத்தில் சொல்வதானால், போக்லண்ட் தீவுகளில் நூறு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்துவிட்ட அத் தீவு வாசிகளின் கையிலேயே அதன் ஆட்சி உரிமையைக் கொடுத்துவிட்டு பிரிட்டனும் — ஆர்ஜன்டீனாவும் விலகிக்கொள்ள வேண்டும். வேண்டுமானால் அத்தீவுகளின் பாதுகாப்பை ஐ. நா. பொறுப்பில்விட்டுவிடலாம்.

# மருத்துவம் விருந்தாகிறது

சுந்தரம்

பொருள்; மருத்துவக் கண்காட்சி.

இடம்: புனித சம்பத்திரிசியார் கல்லூரி.

காலம்: 21-4-82-25-4-82.

நேரம்: காலை 9-00 இரவு 8-00.

நோக்கம், உங்கள் நல் வாழ்வு.

விழா; மருத்துவக் கண்காட்சி.

அழைப்பு: யாழ். மருத்துவ சங்கம்.

யாழ். மக்களுக்கு இந்த விழா—மருத்துவக் கண்காட்சி—ஒரு பெருவிழா என்பதில் என்ன சந்தேகம்? மேலே குறிப்பிட்டவாறு இந்தக் கண்காட்சிக்கு யாழ். மக்கள் அனைவரையும் யாழ். மருத்துவ சங்கம் அழைக்கின்றது. ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைப்பதாகவே நீங்கள் கருதவேண்டும். ஏனெனில் இந்தக் கண்காட்சி உங்களைப் பற்றியது; உங்கள் குடும்பத்தைப் பற்றியது.

கண்காட்சியில் முக்கியம் கொடுக்கப்படும் விஷயங்களின் பட்டியல் பிரமிப்பைத் தருகின்றன. அவற்றுள் சில:

இதயம், நெஞ்சு, இரைப்பை, குடல், தோல், பல், எலும்பு, கண், நரம்பு நோய்கள், போஷனை, நோய்த் தடுப்பு. குடும்பக் கட்டுப்பாடு கர்ப்பம் பிரசவம்—

இரத்த வங்கி, சுகாதார சேவைகள், தாதிகள் சேவை, சத்திரசிகிச்சை அறை... சட்ட வைத்தியம், மருத்துவ சரித்திரம், நஞ்சு ஊட்டல், பாம்புக்கடி...

பட்டியல் அல்ல முக்கியம். பார்ப்பதுதான் அத்தியாவசியம். அத்துடன் கேட்டு அறிவதும் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வதும் மிகுந்த பலன் தரும்.

இது ஒரு சாதாரணக் கண்காட்சி அல்ல. ஒரு பெயர் பெற்ற மருத்துவச் சங்கம் ஏற்படுத்தி, ஒவ்வொரு காட்சிப் பொருளும் அதில் தேர்ச்சி பெற்ற நிபுணரால் கண்காணிக்கப்படுவது. வைத்திய மாணவ மாணவிகளால் உருவாக்கப்படுவது. விளக்கம் தரப்படுவது.

பொதுமக்களுக்கு மருத்துவ சுகாதாரக் கல்வியைப் புகட்டுவது ஒரு தனிக்கலை. நுட்பமான விஷயங்களைத் தேர்ந்து பிரயோசனமானவற்றை எளிமையாகவும், மனத்தில் பதியவைக்கும் முறையிலும் தெரிவிக்கவேண்டும்.

இந்தக் கண்காட்சியில் இந்தக் கல்வி முறைகளைத் திறமையாகக் கையாளுகிறார்கள் யாழ். மருத்துவ சங்கம். பல பேரின் பல நாள் உழைப்பு, உங்கள் கண்களுக்கு விருந்தாகிறது.

யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகள் எல்லாம் இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பூரணமாகப் பயன்படுத்தும் என்று நம்புகிறோம். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகையுடன் பிரவேசக் கட்டணம் அமைத்த மருத்துவச் சங்கத்தினருககு நன்றி கூறுகின்றோம்.

பெரியவர்களுக்கு இந்தக் கண்காட்சி இன்னும் அதிகமான பிரயோசனம் உள்ளது. பிள்ளைகளுக்காவது பாடசாலையில் இவற்றைப் படிப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் உண்டாகலாம். ஆனால் பெரியவர்களுக்கு இந்த முறையில் போதிப்பது யார்?

இரத்த அமுக்கம், சலரோகம், புற்றுநோய், மூலத்தால் இரத்தம் வெளிவருதல், கிட்னியில் கற்கள், இரகசிய நோய்கள். நேரிலே அறிவதற்கு ஒரு அரிய சந்தர்ப்பம்.

இது ஒரு ஆரோக்கியமான விருந்து. ஆகவே பந்திக்கு முந்தவேண்டும் என்பதுதானே பழமொழி.

## இந்துசமய சஞ்சிகை திருவருள்

ஒருகண்ணோட்டம்

நீண்ட இடைவெளிக்குப் பின், ஏறத்தாழ இரண்டாண்டுகளாக, சைவப்பெருமக்கள் சிலரின் ஆராமை மிக்க முயற்சியின் பயனாக ஒரு சைவசமய சஞ்சிகை, ஆண்டிற்கு 6 பிரதிகள் என வெளிவந்துகொண்டிருக்கிறது.

இச்சஞ்சிகை தனக்கென ஒரு புதுவித அமைப்புவிதிகளை ஏற்படுத்திக்கொண்டு திகழ்வதைக் காண்கிறோம்.

தேவாரப்பதிகங்கள், அரிதிற் கிடைத்த ஈசுவரமாலை நமச்சிவாய மாலை ஆதியவற்றை அச்சிட்டு ஒரு புரட்சிசெய்துள்ளது இவ்விதழ். அண்மையில் வெளிவந்த 7வது இதழில் யோகசுவாமிகள் பெரிதும் பாராட்டித் தனது அடியார்களை வாசிக்கக்கூறும் நமச்சிவாயமாலை வெளிவந்துள்ளது. அருள்மிகுந்த இம் மாலையே எம்மைக்கவர்ந்து இச்சஞ்சிகை பற்றிய கண்ணோட்டத்தை எழுதத் தூண்டியது என்றால் மிகையாகாது. அன்பர்களும், யோகர்சுவாமிகள் கூறியது போன்று இம்மாலையை காலை மாலை இரு வேளைகளிலும் பயபக்தியுடன் பாராயணம் செய்து இறைவனின் அருளைப் பெற்றுய்வார்களாக! மேலும், புகழ்வாய்ந்த சைவப்பெரியார்களின் ஆராய்ச்சி மிகுந்த கட்டுரைகள், சமயக்கோட்பாடுகளை உணர்த்தும் கதைகள், மணிமொழிகள் ஆகியவற்றைத் தாங்கிவரும் இச்சமய இதழ் ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை விரும்பிப்படித்துபயன்பெறவேண்டியஒன்று என்பது எமது உறுதியான கருத்தாகும்.

இதுவரை வெளிவந்த சஞ்சிகைகளில் யாழ்ப்பாணகுடாநாட்டிலுள்ள பழமைவாய்ந்த தலங்களைப்பற்றிய வரலாறுகள் வெளிவந்திருப்பது மற்றொரு விசேஷ அம்சமாகும்.

—அபிமானி.

## சிறிமா-..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருமே கலந்துகொண்டனர்.

இதுபற்றி கொல்வின் ஆர். டி. சில்வா நேற்றிரவு கருத்துத்தெரிவிக்கையில், ஐக்கிய தேசியகட்சிக்கு எதிராக ஒரு அணியை உருவாக்குவதே தமது இலட்சியமென்றும், இப் பரந்தநோக்கத்தில் எந்தக் கட்சியினரும் இந்த எதிர்ப்பு அணியில் சேருவதை தடுக்கத் தாம் விரும்பவில்லை என்றும் கூறினார்.

ஐக்கிய மேதினத்தை கொழும்பில் கொண்டாடுவதென்று நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு, மேதினவிழா சம்பந்தமான நிகழ்ச்சிநிரலை வரைய ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

## பாராளுமன்ற விவாதம்

(கொழும்பு)

புதிய பாராளுமன்றம் இம் மாதம் 29ம்திகதி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பமான போதும் பாராளுமன்ற விவாதங்கள் மே 4-ம் திகதியே ஆரம்பமாகும்.

## பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் கமத்தொழில் சேவை நிலையத்தில் விவசாய உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. கு. விசுவலிங்கம் கீரிமலை கமத்தொழில் சேவை நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது மாற்றத்தை முன்னிட்டு சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி இளம் விவசாயிகள் கழகத்தினர் பிரியாவிடை வைபவம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளனர் கழகத்தலைவர் திரு. க. செல்வநாதன் தலைமையில் விழா நடைபெற்றது.

# மக்கள் கருத்து

## சிங்கள மொழியில் சைவ வினாவிடை

ஈழநாடு இதழில் அருமையானதொரு ஆசிரியர் கருத்து எழுதியிருந்தீர்கள். நன்கு வரவேற்கத்தக்கது.

தற்காலத் துவேஷ மனப்பான்மை பிடித்த சிங்கள மக்களின் போக்கைப் பார்க்குமிடத்து பின்னுக்கு ஒருகாலம் ''அமுனுகம்'' [ஆறுமுகநாவலருக்குப் பதிலாக] என்ற ஒரு சிங்களவரே சைவ வினாவிடையை எழுதிவைத்தார் என்று சொல்லவும் கூடும்.

எப்படியென்றாலும் சிங்கள தமிழ் மக்கள் நல்லுறவு ஏற்படும் என்ற நோக்குடன் மொழிபெயர்ப்புச்செய்த உயர் திரு. டீ. டீ. நாணயக்காரரவைப் பாராட்டவேண்டும்.

1965ம் ஆண்டில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஆறுமுகநாவலர் தினத்தைத் தேசிய முறையில் கொண்டாட ஏற்பாடு செய்தவர்களில் நானும் ஒருவன். சிங்கள மக்கள் ஆறுமுகநாவலரவர்கள் நம்நாட்டு மக்களுக்குச் செய்த சேவையை அறியவேண்டும்.

வெ. சு. நடராசா
'கலாபவனம்'
நல்லூர்

## ''சைனுய் பிரதேசம்

# எகிப்திடம் கையளிக்கப்பட்டால் தற்கொலை செய்வார்களாம்!

### யூத தீவிரவாதிகள் எச்சரிக்கை

லண்டன், ஏப். 19

சைனுய் பிரதேசம் எகிப்திடம் திரும்பக் கையளிக்கப்படுவதை ஆட்சேபித்து சில யூத தீவிரவாதிகள் தாம் தற்கொலை செய்யப்போவதாகப் பயமுறுத்தியுள்ளனர்!

சைனுய் பிரதேசத்தின் வட பகுதியில் தங்கியிருக்கும் இந்த தீவிரவாதிகள் நச்சுப் புகையை தமது இருப்பிடத்தில் புகவிட்டு தற்கொலை செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.

இவர்களின் தற்கொலையைத் தடுப்பதற்காக மதகுரு ஒருவர் இவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

அதேவேளை சைனுய் பிரதேசத்தில் தங்கியிருப்பவர்களை வெளியேற்ற இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். [வெ]

## கல்வி சுற்றுலா

யாழ்ப்டாணம்)

நாவற்குழி கிழக்கு தச்சன் தோப்பிலுள்ள கிக்ஸ் கல்வி நிறுவனத்தின் மாணவர்கள், அதிபர் திரு. எஸ். சேத்திரபாலன் தலைமையில் கல்விச்சுற்றுலா ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.

இவர்கள் 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம், லேடன் பெனியன் தொழிற்சாலை, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, மில்க்வைற் நிறுவனம், திருநெல்வேலி விவசாயப் பண்ணை, அலுமினிய தொழிற்சாலை, யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான சைவாலயங்கள் ஆகியவற்றையும் பார்வையிட்டனர்,

## நேட்டோ ஸ்தாபனத்தில் உட்பூசல்கள்!

லண்டன் ஏப் 19

நேட்டோ ஸ்தாபனத்தில் உட்பூசல்கள் உருவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. நேட்டோ நாடுகளுக்கு அமெரிக்காபாது காப்பளிக்காததை தொடர்ந்தே உட்பூசல்கள் தோன்றியுள்ளதாக கூறப்பட்டது.

நியூட்ரோன் குண்டுகள் உற்பத்தி தொடர்பாக அமெரிக்கா தெளிவான கொள்கையொன்றை பின்பற்றுததால் நேட்டோ நாடுகளின் அவநம்பிக்கைகுள்ளாகியிருந்ததும் தெரிந்ததே. (வெ)

# போக்லண்ட்தீவுகள் பிரச்னை: சமரசமுயற்சி தோல்வியாம்!

### ஆர்ஜென்டினவெளிநாட்டமைச்சர்கூறுகிருர்

புவனர்ஸ்அயர்ஸ், ஏப். 19

போக்லண்ட் தீவுகள் பிரச்னை தொடர்பாக பிரிட்டனுக்கும் ஆர்ஜென்டீனவுக்குமிடையே அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. அலெச்சாண்டர் ஹெய்க் கடந்த சில தினங்களாக மேற்கொண்டு வந்த சமரசமுயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளதாக ஆர்ஜென்டீன வெளிநாட்டமைச்சர் திரு. நிக்கநுரா மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

திரு. ஹெய்க் இன்று ஆர்ஜென்டீனவிலிருந்து லண்டனிற்கு சென்று அங்கிருந்து வாஷிங்டன் போய்ச்சேருவாரென அறிவிக்கப்பட்டது. [வெ]

## இந்திரா — மன்னர் காலித் சந்திப்பு

றியாத் ஏப். 19

சவூதி அரேபியாவில் விஜயம்மேற்கொண்டிருக்கும் இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி நேற்று சவூதி அரேபியாமன்னர் காலித்தை சந்தித்து உலகின் பல்வேறு விடயங்கள் குறித்தும், இருதரப்பு நட்புறவுகள் பற்றியும் கலந்துரையாடினுர்.

திருமதி இந்திரா காந்தி சவூதி அரேபியாவின் நிதியமைச்சர், வெளிநொட்டமைச்சர், பெற்ரோலியத்துறை அமைச்சர் ஆகியோரையும் சந்தித்து இந்தியாவின் அபிவிருத்தி திட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்தார். [வெ

## தபாலில் வந்த கடிதம் இளைஞரின் உயிரைபறித்தது!

(மாவிட்டபுரம்)

தபாலில் வந்த கடிதம் ஒன்றையடுத்து விரக்தியுற்றுக் காணப்பட்ட நபர் ஒருவர் நஞ்சருந்திதற்கொலை செய்து கொண்டார்.

மஸ்கெலியாவைச் சேர்ந்த கோபால் இராமர் (33 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

மல்லாகத்தில் வீடொன்றில் உதவியாளராக இருந்த இவர் மிகவும் சந்தோஷமாகவே இருந்துவந்தாகவும், சம்பவதினம் தபாலில்கடிதம் ஒன்று வந்ததையடுத்து மனமுடைந்து கவலையுடன் காணப்பட்டதாகவும் அதனையடுத்து நஞ்சருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

இறந்தவரின் சகோதரர் கோபால் இலட்சுமணன் மஸ்கெலியாவிலிருந்து வந்திருந்தார். அவர் தமது சாட்சியத்தில், ''காலமானவருக்கு நெஞ்சில் ஓர் எரிவு இருந்து வந்ததாகவும், அதன் காரணமாக தற்கொலை செய்யப் போவதாக பலமுறை கூறி வந்ததாகவும் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை நடத்திய வைத்திய அதிகாரி செல்வி கனகசபையும் சாட்சியமளித்தார்.

இறுதியில் தற்கொலை என தீர்ப்பு அளிக்கப்பட்டது.

### அரசின் தாராளபொருளாதாரக்கொள்கையால்

# நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்துள்ளது

### ஜனுதிபதி கூறுகிருர்

(மொறட்டுவ)

''அரசின் தாராள பொருளாதாரச் கொள்கையினுலும், திடசங்கற்ப போக்கினுலுமே நாடு பொருளாதார ரீதியில் முன்னேற முடிந்தது. கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் அத்தியாவசிய அன்ருடப் பொருட்களை கூட மக்களால் பெற முடியவில்லை''.

இவ்வாறு ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மொறட்டுவவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

'வாழ்க்கைச் செலவு இன்று அதிகரித்துள்ளதை அரசு ஒத்துக்கொள்கின்றது. 1977ம் ஆண்டிலிருந்து மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளதால் அது எமது உற்பத்தி துறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

''மானிய அடிப்படையில் பொருட்களை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருந்தால் நாட்டின் தேசிய வளர்ச்சியில் தேக்கநிலை ஏற்படும்'' என்ருர். [வெ]

## காதல் ஜோடிகள் இணைந்துவாழ பொலிசார் அனுமதி

[மாவிட்டபுரம்]

பொலிசாரால் தேடப்பட்ட காதல் ஜோடி ஒன்று பொலிசில் சரண் புகுந்து தாம் இணைந்து வாழ விருப்பம் தெரிவித்ததையடுத்து பொலிசார் அதற்கு அனுமதி வழங்கினர்.

வடலியடைப்பைச் சேர்ந்த வைத்திலிங்கம் வள்ளியம்மை என்பவர் காங்கேசன்துறை பொலிசில் செய்த முறைப்பாட்டில் தமது மகளைக் காணவில்லையென்றும், அவர் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாமெனவும் தெரிவித்தார்.

(6ம் பக்கம் பார்க்க)


CENTRIC

செண்ட்றிக் விவசாய பம்ப்.




- உலகப் புகழ் றுரூபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
- நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
- இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
- நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
- செண்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/– முதல்.
1½'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

ஜினசேன மிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9



## அரிய சந்தர்ப்பம்

உங்கள் பணத்தை இலாபகரமான வழியில் முதலீடு செய்ய விரும்புகின்றீர்களா? உடனே ஒருவீட்டையோ, வீட்டு நிலத்தையோ அன்றி ஒரு தோட்டத்தையோ வாங்கிவிடுங்கள். ஒரு வருடத்தின் பின் உங்கள் பணத்தின் பெறுமதி பன்மடங்காக உயர்ந்திருப்பதை காண்பீர்கள். இது சம்பந்தமாக உங்களிற்குத் தேவையான சகல உதவிகளையும், ஆலோசனைகளையும் தரக் காத்திருக்கின்ருர்கள். ''த பிறுன்ஸ் கொம்பனியினர்.''

வடபகுதியில் எப்பகுதியிலாவது வீட்டு நிலங்களோ, காணிகளோ, தோட்டங்களோ தேவைப்படின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்ருேம்.

மேற்குறிப்பிடப்பட்டவற்றை வாங்கிக் கொள்ளப் போதிய பணவசதி இல்லையா? எம்முடன் கலந்தாலோசியுங்கள்.

நீங்கள் தவருது தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

திட்ட அதிகாரி:—

தோட்டக் காணிப்பிரிவுப் பகுதி

த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட்

249, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம். தொலைபேசி: 7680.

## பங்கு வழங்குதல் இப்பொழுது நடைபெறுகிறது

அதிகரித்துவரும் சிமெந்து தேவையை உள்ளூர் உற்பத்தி சமாளிக்க முடியாமலிருக்கிறது.

இதனையும், காலப்போக்கில் இது மேலும் கூடும் என்பதையும் அறிந்துள்ள இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம், இவற்றை நிறைவேற்றுவதற்காக லங்கா சிமெந்து லிமிடெட்டை ஆரம்பித்துள்ளது.

தொழிற்சாலை, துறைமுகப்பாலம், மற்றும் துணைச்சேவைகளைக் கொண்ட முற்றிலும் தன்னியக்க முறையில் அமைந்த தொகுதி ஒன்றினை, லங்கா சிமெந்து லிமிட்டெட் காங்கேசன்துறையில் பெருமளவிற்குப் பூர்த்திசெய்துள்ளது.

திட்டத்தின் 1 வது கட்ட வேலைகள் இந்த ஆண்டு ஆரம்பித்ததும் 500,000 தொன் உற்பத்தி செய்யப்படும். 1983, ஜூன் மாதத்தில் முடிவடையும் 2 வது கட்டத்தில் உற்பத்தி இரண்டு மடங்காக, அதாவது வருடாந்தம் 10 லட்சம் தொன் உற்பத்தி செய்யப்படும்.

இலாபம் தரும் இந்த முயற்சியில் நீங்களும் சேருங்கள். ஒவ்வொன்றும் 10 ரூபா பெறுமதியான 1.2 கோடி பங்குகள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன. பங்கு வழங்குகையின் மொத்த பெறுமதி 30 கோடி ரூபா. முதல் ஆண்டிலேயே பங்கிலாபம் பெறும் வாய்ப்புண்டு.

### முதலீட்டு நிவாரணமும் வரிச் சலுகைகளும்

- வரிமதிப்பிடற்குரிய வருமானத்தின் 1/3 பகுதிவரை முதலீட்டு நிவாரணம்
- கம்பெனியின் இலாபங்களின் மீது ஐந்து வருட வரி விடுமுறை
- ஐந்து வருடங்களுக்கு பங்கிலாபங்களுக்கு வரி விலக்கு
- வரி விடுமுறைக்குப் பின்னர் குறைந்த வீத வரி மதிப்பு
- வரி விடுமுறைக்குப் பின்னர் பங்கிலாபங்களின் மீதான வரி நிறுத்திவைக்கப்படமாட்டாது
- வதிவு கம்பெனிகள் பெறும் பங்கிலாபங்களுக்கு வரி இல்லை
- மூலதன இலாபங்களுக்கு வரி இல்லை

பங்கு வழங்குதல் மார்ச் 3 முதல் 1982 ஏப்ரல் 30 வரை

முதலிடு செய்வது பற்றிய விபரங்களைத் தரும் முற்பகர்வின் இலவச பிரதிக்கு இங்கு தரப்பட்டுள்ள கூப்பனை அனுப்பி வையுங்கள்.

# சீமெந்துப் பெருந்தொழிலில் நீங்களும் முதலிடலாம்

நிர்வாக ஆலோசனைப் பிரிவு,
இலங்கை வங்கி, 411, காலி வீதி, கொழும்பு - 3

லங்கா சிமெந்து லிமிட்டெட் பங்கு வழங்குகை மீதான முற்பகர்வின் பிரதியொன்றையும் பங்குகளுக்கான ..............விண்ணப்பப் படிவங்களையும் தயவு செய்து அனுப்பி வையுங்கள்.

பெயர் : ........................................

முகவரி: ........................................

லங்கா சிமெந்து லிமிட்டெட்டுடன் சேர்ந்து உறுதியான எதிர்காலத்தை கட்டியெழுப்புங்கள்

**லங்கா சீமெந்து லிமிட்டெட்**

அல்மனர் கட்டிடம், 302, காலி வீதி,
கொழும்பு - 4. தொலைபேசி: 589126




தமிழ் இனவிடுதலைக்காக

# உலக அரங்கில் ஆதரவை திரட்டி வருகிறோம்'

## இளைஞர்பேரவை விழாவில் அமிர் உரை

(யாழ்ப்பாணம்)

''தமிழ் இனத்தின்விடுதலைக்காக வாழ்நாள் முழுவதும் பல வகையான திட்டங்களைதீட்டி முயன்று கொண்டிருக்கிறோம். தமிழ் இனத்தை ஒரு தேசிய இனமாக வளர்த்தெடுக்க தந்தைசெல்வநாயகம் கடந்த 30ஆண்டுகளாக பாடுபட்டார். விடுதலையை நாடி நிற்கும்நாம் உலக அரங்கிலே அதறகான ஆசரவைத் திரட்டவேண்டும். எமது விடுதலைக்கு நேசநாடுகளின் ஆதரவைப்பெறவேண்டும். இதற்கான நடவடிக்கைகளிலேயே எமது இயக்கம் தற்போதுஈடுபட்டுவருகிறது''

மேற்காண்டவாறு எதிர்க்கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ் இளைஞர் பேரவை நடாத்திய இலட்சியச் சொற்பொழிவுகளும், கதம்பநிகழ்ச்சிகளும் என்ற நிகழ்ச்சியில் தமிழினத்தின் விடுதலைப்பாதை என்னும் விடயம்தொடர்பாக சொற்பொழிவாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''ஐ. நா. சபையிலுள்ள பல்வேறு குழுக்களிடமும் எமது இனத்தின் எதிர்காலம்பற்றி எடுத்துக் கூறியுள்ளேன். தந்தை செல்வாவழியில் செல்லும் எமது இயக்கம் நிச்சயம் வெற்றிபெறும். நேசநாடுகளின் ஆதரவு உருப்பெறுகின்ற நேரத்திலேதான் எந்தவொருவிடுதலை இயக்கமும் வெற்றிபெறமுடியும்.

''வெளிநாடுகளில் வேலை தேடிச்சென்றுள்ள எமது இளைஞர்களும் எங்கள் லட்சியத்தை அங்குள்ள ம்க்கள் முன் எடுத்துக்கூறிவருகிறார்கள். கடந்த 35 ஆண்டுகளாக விடுதலைப் போராட்டம் நடத்திவரும் பாலஸ்தீன விடுதலை இயக்கம் உலக அரங்கிலேதான் அங்கீகாரம் பெற்றதேதவிர இன்னும் சுதந்திரத்துடன் வாழவில்லை. ஆரம்பத்தில் வன்செயல்களிலீடுபட்ட இவ் இயக்கம், அதுகைகூடாததை உணர்ந்து தற்போது இயக்கத்தின் தலைவர் ஜஹப் யாசிர் அரபாத் ராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

சில இளைஞர்கள்வன்முறைச் சம்பவங்களினுல் விடுதலையைப் பெறலாம். என்றுகருதுகின்றனர். வன்முறைச் சம்பவங்களினுல் விடுதலையைப் பெறலாமென்று எண்ணுவது தவறு. வன்முறைச் சம்பவங்களிலீடுபடடுவரும் வடக்கு அயர்லாந்து மக்கள் இன்னும் தமது விடுதலையைப்பெறவில்லை.

மாவட்டசபை அதிகாரங்களை பூரணப்படுத்தவே அரசுடன் பேச்சுவார்த்தைநடத்திவருகிறோம். எமது மண்ணையும் மக்களையும் பாதுகாக்க வேண்டியது எமது இயக்கத்தின் முக்கியபணிகளிலொன்ருகும். மக்களின் பாதுகாப்புக்கருதியே ஊர்காவல் படைகளை அமைக்குமாறு அரசை வற்புத்தினேம் இதற்கான நடவடிக்கைகளை தற்போது அரசாங்கம் எடுத்து வருகிறது.

''தமிழ் இனம் ஒரு தேசிய இனம் என்ற உறுதியையும், எமது இயக்கத்தின் கட்டுக்கோப்பையும் வளர்த்தெடுக்க வேண்டும். அப்போதுதான் எந்தவொரு விடுதலை இயக்கமும் சமது லட்சியத்தில் வெற்றிபெற முடியும். எமது இயக்கத்தின் பிரசாரத்திற்கு பாராளுமன்றத்தை ஒரு கருவியாகவே பயன்படுத்தி வருகிறோம். எமது பிரசாரத்தை

(6ம் பக்கம் பார்க்க)

மேதினத்தை

## யு.என்.பி. எதிர்ப்புதினமாகக் கொண்டாடுவர்

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும் மேதினத்தை யாழ்ப்பாணத்தில் சக்திமிக்க யூ. என். பி. எதிர்ப்பு மேதினமாக நடத்துவதற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] தயாரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளது. மேதினத்தன்று புரட்சிகரமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும், எழுச்சி மிக்க பொதுக் கூட்டத்தையும் நடத்துவதற்கு மேற்படி கட்சியும், இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கமும், நவலங்கா தொழிற் சங்கமும் கூட்டான முடிவுகளை எடுத்துள்ளன.

மேற்படி இடது கம்யூனிஸ்ட் கட்சி தனது மேதினத் தயாரிப்புகளுக்காக வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில், பொது வேலைநிறுத்தம் - பரந்தன் வேலைநிறுத்தம் ஆகியவற்ருல் வேலை இழந்துள்ளவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கும்படியும், கல்வி வெள்ளை அறிக்கையை முற்ருக வாபஸ் வாங்கும்படியும், தமிழ் மக்களுக்கும் - இளைஞர்களுக்கும் எதிரான அடக்குமுறைகளை நிறுத்தும்படியும். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் படியும் கேட்கப்பட்டிருக்கின்றது.

இம் மேதின ஊர்வலம் திருநெல்வேலி சந்தையில் இருந்து ஆரம்பித்து நகரின் முக்கிய வீதிகளுக்கூடாக கூட்டம் நடைபெறும் யாழ். றிம்மர் மண்டபத்தைச் சென்றடையும். இவ் ஊர்வலம் கூட்டத்தில் தென் இலங்கையில் இருந்தும், மலையகம், கிழக்கிலங்கையில் இருந்தும் பிரதிநிதிகள் பெரும்தொகையில் பங்கு கொள்வார்கள்.

இம் மேதினத்திற்காக யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இளைஞர்கள் ஏற்கனவே நிதி சேகரிப்பில் இறங்கியுள்ளனர். யாழ். நகரத்தில் இளைஞர்கள் குழுக்களாகப் பிரிந்து நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

## போக்லண்ட் நெருக்கடி

[லண்டன்]

ராஜதந்திர பேச்சுவார்த்தைகள் தோல்வியடையுமானுல் போக்லண்ட் தீவுகளிலிருந்து ஆர்ஜென்டீன துருப்புக்களை பலவந்தமாக வெளியேற்ற பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மாக்ரட் தட்சர் உறுதி பூண்டுள்ளார்.

[வெ]

## நூல் வெளியீடு

[சுழிபுரம்]

வட்டூர் சைவமணி ஆசிரியர் திரு. சு. மருதபிள்ளை பொழிப்புரை எழுதிய திருவாதவூரர் புராண நூல் அச்சிட்டு வெளியிடும் பணியை வழக்கம்பரை சன சமூக பஜனைச் சபையினர் மேற்கொண்டுள்ளனர். இந் நூல் விரைவில் வெளியீடு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

# ''தபால்சேவை ஏஜென்சி முறையால் மக்கள் பாதிப்படைவர்''

## கோப்பாய் எம். பி. கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

''நகர்ப்புறமில்லாத பகுதிகளிலிருந்துதான் தபாற் சேவைக்கு அதிக வருமானம் கிடைக்கிறது. தபால், தந்திச் சேவைகளைக் கிராமப்புற மக்கள்தான் அதிகம் பயன்படுத்துகிறார்கள். இச்சேவைகள் மூலம் அதிக நன்மைகளும் அடைகிறார்கள். உப அஞ்சல் அலுவலக முறைக்குப் போட்டியாக ஏஜன்சி முறையைத் தபாற்சேவையில் புகுத்த அரசு மறைமுகமாக முயற்சி எடுத்துவருகிறது. இதனுல் அரசுக்கு அதிக வருமானம் வரலாம். ஆனுல் பொது மக்கள் மிகவும் பாதிப்படைவர்.''

இவ்வாறு கோப்பாய்த் தொகுதி எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற உப அஞ்சல் அதிபர்கள் சங்கத்தின் 8வது, 9வது வருடாந்த மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. அ. கோபாலரத்தினம் தலைமையில் நடைபெற்ற வருடாந்த மகாநாட்டில் திரு. ஆலாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில், ''அரசாங்கம் தனது தாராள ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கையைத் தபாற்சேவையிலும் புகுத்த முற்படுகிறது. உப அஞ்சல் அதிபர்களுக்குப் போட்டியாக ஏஜன்சிகளை நியமித்துத் தபாற்சேவையை நடாத்த ஏற்பாடு செய்துவருகிறது. இதனுல் பொதுமக்கள் அனுபவித்து வந்த உதவிகளைப் பெருமளவில் இழப்பதுடன், ஏஜன்சிமார்களின் கெடுபிடிகளுக்கும் ஆளாகின்ற நிலைமையும் ஏற்படும். திறந்த சேவை எல்லாவற்றுக்கும் பொருந்திவராது என்று அரசாங்கம் அறிந்திருந்தும் அதற்கு மாருக ஏஜன்சி முறையை ஏற்படுத்த முனைவது விந்தையாக உள்ளது. அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் தாராள ஏற்றுமதி இறக்குமதி முறையால் இந்நாட்டில் இருக்கும் கூட்டுறவுமுறை மிகவும் பாதிப்படைந்துள்ளது கூட்டுறவையும், தனியார் சேவையையும் அரசாங்கம் சமமாகப் பாவிக்கவேண்டும். சமமாகவே இரண்டுக்கும் ஒரேயளவு மதிப்பை வழங்கவெண்டும். இந்தத் திறந்தசேவையை அஞ்சல் துறைக்குக் கொண்டு வந்தால் பொதுமக்கள், விசேடமாகக் கிராமப்புற மக்கள் பெரிதும் பாதிப்படைவார்கள் உங்களது சங்கம் சமர்ப்பித்த கோரிக்கைகள் குறித்து அரசாங்கத்தின் கடந்த வரவு செலவுத் திட்ட உரையின் போது நானும், எனது கட்சியும் தெளிவாக எடுத்துச்கூறினேம். அமைச்சரவையின் கவனத்திற்கு மீண்டும் இதனைக் கொண்டுவந்து உங்களது கோரிக்கைகளை வென்றெடுக்க நாம் மட்டுமல்ல, நீங்களும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். சேவை மனப்பான்மையுடன் செய்யப்படும் உங்கள் சேவைக்கு நாம் மதிப்பளிப்பதுடன், உங்களது கோரிக்கைகளில் மிகவும் முக்கியமாக விளங்கும் ஓய்வூதியம், இலவசப் புகையிரதச்சீட்டு, அதிகப்மடியான சம்பள உயர்வு ஆகியவற்றைப் பெற்றெடுக்கத் தொடர்ந்தும் முயற்சி எடுப்போம்'' என்று கூறினர்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில், ''நீங்கள் மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகள் அளப்பரியது. சில உப அஞ்சல் அலுவலகங்களில் நிரந்தர அதிபர்கள் இல்லாமற் செயற்படுவது இந்நாட்டின் அரசாங்க சேவையைக் கேவலமாக மதிக்கும் நிலைமையை உண்டாக்குகிறது. நீங்கள் ஐக்கியப்பட்டு, எம்முடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு செயற்பட்டால் உங்களது கோரிக்கைகளை வென்றெடுக்க நானும், நான் சார்ந்திருக்கும் இயக்கமும் தொடர்ந்தும் முயற்சி எடுப்போம்'' என்று கூறினர்.

ஊர்சாவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் ''தமிழ்ப்பகுதிகளில் உப அஞ்சல் அதிபர்களாக பணிபுரியும் தங்களது சங்கம் சமர்ப்பித்திருக்கும் இக்கோரிக்கைகள் தென்னிலங்கையில் பணிபுரியும் சிங்கள சகோதரர்களுக்கும் பொருந்தும் ஆதலால் அவர்களுடன் இணைந்து இக் கோரிக்கைகளை ஒரே குரலுடன் சமர்ப்பித்தால் மிக விரைவில் இவைகளை வென்றெடுக்க முடியும்.

''நீங்கள் அரச சேவையாளர்களாக மாருமல் இப்பொழுது இருக்கும் நிலையில் தொடர்ந்தும் இருந்தால் அரசாங்கத்தின் பதவியுயர்வு, மொழிப்பிரச்னை போன்ற கெடுபிடிகள் உங்களுக்கு ஏற்படாது.

''இது எனது சொந்தக் கருத்தாகும் அரசாங்கத்தின் கெடுபிடிகள் இல்லாமல் நீங்கள் சுதந்திரமாகச் சேவை செய்ய வேண்டுமானுல் இப்பொழுது இருக்கும் சுதந்திர நிலையில் தான் நீங்கள் இருப்பது சாலச்சிறந்ததாக அமையும் உங்களுக்கு ஏனைய அரச ஊழியர்களுக்கு கிடைக்கும் சம்பள உயர்வுதான் நிரந்தர சேவை நியமனம் ஆகியன கிடைக்கு முயற்கி எடுக்க நாம் முயலுவோம்'' என்று குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து அங்கத்தவர்கள் பலர் பேசினர். அவைவருமாறு.

உப அஞ்சல் அதிபர்கள் தமது சேவைக்காக செலுத்தியிருக்கும் கட்டுப்பணத்திற்கு ஏனைய வங்கிகள் வழங்குவது போல கூடுதலான வட்டி வழங்க வேண்டும்.

அஞ்சல் அலுவலகங்கள் மூலம் பொது மக்கள் செலுத்தும் சேமிப்புப்பணத்திற்கு ஏனைய வங்கிகள் வழங்குவது போல கூடுதலான வட்டியை வழங்க வேண்டும்.

''உப அஞ்சல் அதிபர்கள் அனைவரையும் நிரந்தரசேவையில் அமர்த்தி அவர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பளம் வழங்க வேண்டும்.

''ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல உப அஞ்சல் அதிபர்களுக்கும் இலவசப்புகையிரத

(7ம் பக்கம் பார்க்க)

தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான
பணவசதி

த பிறுன்ஸ் கம்பனி
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
தங்க நகைகளுக்கும்,
தங்க கட்டிகளுக்குமான
பணவசதி
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

த பிறுன்ஸ் கம்பனி லிமிட்.
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

# பொலிஸ் - பொதுமக்கள் கிரிக்கெட் போட்டி

## பொதுமக்கள் வெற்றி

[மாவிட்டபுரம்]

பொலிசாரும், பொதுமக்களும் மோதிய கிரிக்கெட் போட்டியொன்றில் பொதுமக்களது கோஷ்டி வெற்றிபெற்றது.

பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்காக காங்கேசன்துறைப் பொலிசாரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கிரிக்கட் போட்டியில் பொலிசாருடன் பொதுமக்கள் சார்பில் காங்கேசன்துறை நியூகோ ஸ்தாபன தொழிலாளர்கள் பங்கு பற்றினர்.

காங்கேசன்துறை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த 25 ஓவர் கிரிக்கெட் போட்டியில் பொலிஸ் கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது. பொதுமக்களது கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது.

பொதுமக்களது கோஷ்டி 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இக் கிரிக்கெட் போட்டியில் காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர் திரு. கே. எல். ஹெட்டியாராச்சி, காங்கேசன்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. எதிரி விக்கிரம ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பொலிஸ், பொதுமக்கள் நட்புறவுக்காக இவ்வாறான போட்டிகளைத் தொடர்ந்துப் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [வெ!

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
சௌகார் ஜானகி
நாகேஷ்
தில்லுமுல்லு

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9.15
கமலஹாசன்
நினைத்தாலே இனிக்கும்

Regal Today only
Daily 10-30, 2-15, 4 30, 7-00 9-30
ROBERT TAYLOR
in
Hunter of the Unknown

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-00, 9-30
Burt Reynolds – Catherine Deneuye in
HUSTLE

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்.–தேவிகா
குமுதம்

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
குழந்தையும் தெய்வமும்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 2.30, 6.00 and 9.30
சிவாஜி, சாவித்திரி, சந்திரபாபு
காத்தவராயன் (புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்நகர்) 10–30, 2–30, 6–15, 9–45
19–4–82 — 20–4–82 மட்டும்
விஷ்ணுவர்தன் சந்திரகலா
அலைகள் (புதிய பிரதி)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி, ஜெயலலிதா, நம்பியார்
தாய் (புதிய பிரதி)

4-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ரஜனிகாந்த்—சிவாஜி கணேசன்—
ஸ்ரீபிரியா—சுபாஷினி— நாகேஷ் நடித்த
★நட்சத்திரம்★
(ஈஸ்மன்ட் கலர்)

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 7ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(20—4—82)

மேடம்: உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும் பணவிவகாரத்தின்மூலம் பகை தோன்றலாம் மனதில் ஆத்திரம் அலை மோதும். நிதானத்துடன் இருக்கவும்.

இடபம்: எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு. வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். தொழில்துறையில முன்னேற்றம் காணப்படும். வாகனச் சொந்தக்காரருக்கு நல்லநாள்.

மிதுனம்: வசதிகள் பெருகும் வாழ்க்கையும் வளமாகும். தொழில்துறையில் புதியவெற்றிகள் கிடைக்கும் நண்பர்களிடம் இருந்து உற்சாகமான வரவேற்புக்கிடைக்கும்.

கடகம்: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொட இன்று அதிகபேச்சைத் தவிர்த்துக் கொள்ளவும். துயர்படிந்த தினம்.

சிங்கம்: இல்லத்தில் இனிமை தழுவும் வெளியிடத்துத் தொடர்புகள் பெருகும் இனசனங்களின் உதவியுடன் செல்வாக்குப் பெருகும்.

கன்னி: பணமுடையினால் பெரிதும வேதனைப்படுவீர்கள் ஏமாற்றமான செய்திகள் கிடைக்கும் மனத்தளர்ச்சிக்கு இடம் கொடுக்காது நடக்கவும்.

துலாம்: கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும் எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள் சிலருக்கு நன்மையான இடமாற்றம் ஏற்படலாம்.

விருச்சிகம்: உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள் தொழில்துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும் வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும்.

தனு: பொதுப்பணியில் ஈடுபடுவீர்கள் பொதுவாக அரசியல் வாதிகளுக்கு புதிய ஆர்வம் பிறக்கும் சிலருக்கு பதவி உயர்வும் ஏற்படலாம்.

மகரம்: அதிக சிந்தனை தலையிடியைக் கொடுக்கலாம் உடல்நலம் பாதிக்க படலாம் வீண்பொருட்களினால் பணம் விரயமாகலாம். அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

கும்பம்: சிறு விடயத்திற்குக் கூட அதிக ஆத்திரப்படுவீர்கள வீணான சந்தேகங்களும் தோன்றலாம், எதையும் சிந்தித்தபின் செயலாற்றவும்.

மீனம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள் எதிலும் நிறைவு தென்படும் புதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்குப் புதிய பாதையைக் காட்டலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## காதல்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து காங்கேசன்துறைப் பொலிசார் இந்த யுவதியைத் தேடிவந்தனர். இந்த யுவதி தமது காதலனுடன் வந்து காங்கேசன்துறைப் பொலிசில் சரண் புகுந்தார்.

தாம் திருமணப்பதிவுசெய்து கொண்டுள்ளதாகக் கூறி திருமண பதிவு அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பித்த இக் காதல் ஜோடி தாம் இணைந்து வாழ விருப்பம் தெரிவித்தது.

இதனையடுத்து பொலிசார் யுவதியின் பெற்றோரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து யுவதியின் விருப்பத்தை அறிய முற்பட்டபோது யுவதி பெற்றோரிடம் செல்ல மறுத்து விடவே, யுவதியையும், அவரது காதலனையும் இணைந்து வாழ பொலிசார் அனுமதி வழங்கினர்.

# மருத்துவ கண்காட்சியில் முதலுதவி காட்சிச்சாலை

(பண்டத்தரிப்பு)

யாழ். மருத்துவ சங்கம் நாளை புதன்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரியில்ஆரம்பிக்கவிருக்கும் 5நாட்கள்கண்காட்சியில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரின் முதலுதவி செய்முறை காட்சிசாலையும் இடம் பெறவுள்ளது.

தினசரி வாழ்க்கையில் மக்களை எதிர்நோக்கும் விபத்துகளின் போது முதலுதவிச் சிகிச்சையளித்து உயிராபத்து நேராது எவ்விதம் காப்பாற்றலாம் என்பது பற்றி இக் காட்சி சாலையில் நேரடியாக விளக்கமளிக்கப்படும், யாழ். மருத்துவ சங்கம் விடுத்த வேண்டுகோளை ஏற்று சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி இக்காட்சிச்சாலைக்கான ஒழுங்குகளை செய்துள்ளார்.

## யாழ். சென் ஜோன்ஸ்

# அம்புலன்ஸ் படையினர் சேவைக்கு பாராட்டு

(பண்டத்தரிப்ப)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவ காலத்தில் யாழ். சென்ஜோனஸ் அம்புலன்ஸ் படையினர் ஆற்றிய வீதி, ஒழுங்கு, பாதுகாப்பு, முதலுதவிச் சிகிச்சை ஆகிய சேவைகளை வலி தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ, மகாதேவா, மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

சென் ஜோர்ன்ஸ் படையின் யாழ்.மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பியிடம் இவர்கள் கடித மூலம், குறிப்பேட்டில் பதிவு செய்தும் தங்கள் பாராட்டை தெரிவித்துள்ளனர். மேற்படி ஆலய முகாமையாளரும் ஆலயத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி சேவையாற்றியமைக்காக நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

# மிளகாய்ப்பழ தகராறு தற்கொலையில் முடிந்தது

(மாவிட்டபுரம்)

மிளகாய்ப்பழம் அள்ளுவது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் அக்காவும் தங்கையும் கைபரிமாறும் நிலை ஏற்பட்டதால் மனம்உடைந்த அக்கா நஞ்சருந்தி தற்கொலைசெய்து கொண்டார்.

ஏழாலை மயிலங்காடு என்னுமிடத்தில் நடந்த இச்சம்பவத்தில் இறந்தவர் சரவணை பகவதி (19 வயது) என்பவராவர்.

இவரது மரணம் குறித்துத் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்தினர்.

காலமானவரின் சகோதரி சரவணை தனபதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

''காலமானவர் எனது அக்கா. எங்கள் தந்தை இறந்துவிட்டார். 8 சகோதரங்களில் மூத்தவரான அக்காவே எங்களைக் கண்காணித்துவந்தார். வீட்டில் சிறு பிரச்னை ஏற்பட்டாலும் நஞ்சு குடிப்பேன் என்று கூறுவார். சம்பவதினம் மிளகாய்ப்பழம் அள்ளுமாறு என்னிடம் கூற நான் மறுத்தேன். எனக்கு அவர் அடித்தார். நானும் திருப்பி அடித்தேன். இதனையடுத்து மனமுடைந்து காணப்பட்ட அவர் நஞ்சருந்தினார்'' என்றார்.

பிரேத பரிசோதனை நடத்திய வைத்திய அதிகாரி செல்வி பத்மராணி இரட்ணவேலும் சாட்சியமளித்தார்.

தற்கொலையெனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

## சில்லாலை றோ. க. க. வித்தியாலய குறைபாடுகள்

[பண்டத்தரிப்பு]

சில்லாலை றோமன் கத்தோலிக்க கனிஷ்ட மகாவித்தியாலய அபிவிருத்திச்சங்க செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது வித்தியாலயத்தை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகளான ஆசிரியர் பற்றாக்குறை, மணியியல்கூடம் நிறுவுதல், விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட காணியை வித்தியாலயத்திற்கு உரிமையாக்குதல் ஆகியவைபற்றி வடமாநில கல்விப் பணிப்பாளரை சந்தித்து அவரின் கவனத்திற்கு கொண்டுவருவது என்று தீர்மானிக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் சங். சகோதரி மேரி கொன்ரன்றைன், அபிவிருத்திச் சங்க செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி பங்குத் தந்தை அருட் திரு ஹில்லரி ஜெபநேசன் அடிகள் ஆகியோர் அடங்கிய குழுவொன்று இது விடயமாக வடமாநில கல்விப் பணிப்பாளரை நேரடியாகசந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது.

## தமிழ்இன

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தின் மூலம் பயன்படுத்தினால்தான் உலக அரங்கிலே அதனைஇடம்பெறச் செய்யமுடியும்.

ஒரு இனத்தின் விடுதலைக்கு கட்டுக்கோப்பும், இன ஒற்றுமையும் அவசியம். எமது ஐந்து கோரிக்கைகளும் நிறைவேறு ன்ற உறுதிப்பாட்டின் பேரிலேயே பகிஷ்கரிப்பைக் கைவிட்டு மீண்டும் பாராளுமன்றத்திற்கு சென்றோம்.

1979–ம்ஆண்டு தமிழ்நாட்டிலுள்ள ஈரோட்டில் 5 லட்சம் மக்கள்மத்தியில் நானும்எனது மனைவியும் எமது இனத்தின் அவல நிலைபற்றி எடுத்துக் கூறினோம். அதனைக்கேட்டு அங்கிருந்த மக்கள் கண்ணீர் விட்டனர்.

கடந்த பொதுத்தேர்தலில் தமிழ்ஈழலட்சியத்தை முன்வைத்து எமது இயக்கம் 24 தொகுதிகளில் போட்டியிட்டு, 18 தொகுதிகளில் வெற்றி பெற்றது. எழுபத்தைந்து வீத வாக்குகளும் எமக்கு கிடைத்தது.

ஒரு தலைவன் தனது பலம், மாற்றான்பலம், தனது இனத்தின்பலம் என்பதை சீர்தூக்கிப்பார்த்துத் தான் ஏந்தநடவடிக்கையிலும் இறங்குவான்

1974–ம் ஆண்டு ஜனவரி 10–ம் திகதி இடம்பெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் ஒன்பது உயிர்கள் படுகொலை செய்யப்பட்டபின்னர் சிங்கள மக்களுடன் சேர்ந்துவாழ முடியாதென்று தமிழ்மக்கள் தீர்மானித்துகொண்டர். 1974ம் ஆண்டு மே 14–ம்திகதி வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழ் ஈழ தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எமது இயக்கத்தைப் பற்றி யார் எதைக்கூறினாலும் அது தனது விடுதலைப்பாதையில் தொடர்ந்து செல்லும்'' என்றார். (வெ)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதியில் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: அப்பையா அன்சன்ஸ் 29/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம. 2865

மு. க. முத்துக்குமார்,
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றில்
புலோலி தெற்கு,
கந்தப்பிள்ளை கைம்பெண்
சிவக்கொழுந்துவின்
மரணசாதனமில்லா சொத்து
விடயத்தில்
— மரணமெய்தியவர்

கந்தப்பிள்ளை மகள் சார்ந்த
குமாரி, புற்றளை,
புலோலி தெற்கு.
— மனுதார்.

மரணசாதன)
நியாயாதிக்கம்) 1142/Testy

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் சொத்துக்களை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதற்கிணங்க பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1982-ம் ஆண்டு ஆடி மாதம் 02-ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இம் மன்றின் முன்தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

இன்று 1982 சித்திரை 15-ம் திகதி.

மன்றின் ஆணைப்படி

வே. அருணாசலம்,
பதிவாளருக்காக,

மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை. 2874




2851


## விற்பனைக்கு

மானிப்பாய் பட்டினசபை எல்லைக்குள் மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கையில், 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ஆலடிச் சந்தி, வே. சி. கந்தையா, (தேனீர்க் கடை) அவர்களிடம் விபரங்களை அறியவும். 2867

யாழ்ப்பாணம் – கல்வியங்காட்டில் ஆறுபரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. இரண்டு மூன்று பரப்புகளாகவும் விற்கப்படும. விபரங்களுக்கு:- 92, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 2904

## வாடகைக்கு

யாழ். நகரின் மத்தியில் வெலிங்டன் சினிமாவுக்கு அருகில் மலகூட வசதிகள் அடங்கிய அறைமள் வாடகைக்கு கொடுக்கப்படும். பெண்களுக்கு மட்டும் சோமசுந்தரம், 50, பெருமாள் கோயில் தெற்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 2906

சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து 300 யார் தூரத்தில் சங்கானை பிரதானவீதியில் 4 அறைகள், சமையலறை, இருக்கையறை, மின்சாரம மற்றும் வசதிகளுடனும், தென்னையின் பிரயோசனங்களுடனும் வீடு வாடகைக்குண்டு. தொடர்புகொள்ளவும். நடராசா, விவசாயக்கந்தோர் ஒழுங்கை, 852/19, பருத்தித்துறை வீதி, நல்லூர். 2907

WANTED

1. Pharmacist
2. Trainee Dispensers

With A/L passes in 4 Science subjects and with O/L English pass or credit.

Apply on or before 10-5-82 to President, Co-Operative Hospital, Moolai, Chulipuram.
2898

## தபால்சேவை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கீட்டுவழங்கப்பட வேண்டும்.

''விடுதலைப்படியை முழு வேதனத்தையும் சேர்த்துக் கணக்கிட்டு அதிகரிக்க வேண்டும்,

''ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கும் ஆகக் குறைந்த ரூபா 45/- அதிகரிப்புப்படியை உபதபால் அதிபர்களுக்கும் வழங்க ஆவன செய்யவேண்டும்.''

(அரியாலை – நிருபர்)

## ''கைசுத்தமாக இருக்கவேண்டும்''

(சுழிபரம்)

''நேர்மை, நிதானம், கைசுத்தமாக இருந்து கடமை செய்யவேண்டியது அரச ஊழியர்கள் பொறுப்பாகும். புதிதாக விசேட சேவை உத்தியோகத்தராக கடமையேற்றிருக்கும். ஊழியர்கள் யாவரும் இதற்கு முன் மாதிரியாக விளங்க வேண்டும். இவ்வாறு பண்ணாகம் அண்ணாகலைமன்றத்தினர் நடாத்திய பராட்டு விருந்துவைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசிய திரு. க. வாமதேவன் குறிப்பிட்டார். இவ்விருந்து வைபவம் திரு. ஆ. பஞ்சாயுதம் விசேட உத்தியோகஸ்த்தராக நியமனம்பெற்றமையை பாராட்டி நடைபெற்றது. பலர் பாராட்டுரை வழங்கினர்.

# சர்வதேச ஜுரிசபை அறிக்கையில் இலங்கை கலவரம் பற்றி விபரம்

## இளைஞர் பேரவை நிகழ்ச்சியில் நல்லூர் 'சிவா' தகவல்

(யாழ்ப்பாணம்)

''சர்வதேச ஜூரி சபையின் அறிக்கையில் மே, ஜூன், ஆகஸ்ட் கலவர சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இச்சபை ஐ. நா. ஸ்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற சபையாகும். உலகத்தில் இனரீதியான ஒதுக்கல் முற்று முழுதாக அகற்றப்பட வேண்டுமென்று ஐ. நா. சாசனம் கூறுகிறது. எமது பிரச்னை தொடர்பாக உலக நாடுகளின் அபிப்பிராயத்தை தான் எமக்கு சால்பாக ஐ. நா. ஸ்தாபனத்தார் திரட்ட முடியும்'

மேற்கண்டவாறு நல்லூர் எம். பி. யும், தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழ் இளைஞர் பேரவை நடத்திய இலட்சிய சொற்பொழிவுகளும் கதம்ப நிகழ்ச்சிகளும் என்ற நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது –

''எமது இயக்க பிரசாரத்திற்கு வெளிநாடுகளில் 'சற்றர்டே றிவியூ' பத்திரிகை ஆற்றிவரும் பணி பாராட்டத்தக்கது. இலங்கையின் இனப்பதுக்கல் பிரச்னையை இன்னொரு நாடுதான் ஐ. நா. சபையில் கொண்டுவர வேண்டும். நாம் அதனை கொண்டுவர முடியாது. அடிமைப்பட்ட நாடுகள் சுயநிர்ணய உரிமையின் பேரில் சுதந்திரம் பெறும் பிரகடனத்தையும் 1960ம் ஆண்டு டிசம்பர் 14ம் திகதி ஐ.நா சபை உருவாக்கியது.

''தமது உரிமைகளைப்பெற எல்லா மக்களுக்கும் சுய நிர்ணய உரிமை உண்டு என்று இப்பிரகடனம் கூறுகிறது. தேசிய இன ஒற்றுமை என்ற போர்வையிலே ஒரு இனம் மற்ற இனத்தை அடிமையாக்குவதற்கு இச்சாசனம் இடம் கொடாது. ஒரு நாட்டின் உள்நாட்டு பிரச்னையில் ஐ' நா ஸ்தாபனம் தலையிட்டுள்ளது. தென்னபிரிக்கா பிரச்னை இதற்கு உதாரணமாகும்.

ஐ. நா. சபை ஒரு பேசுகின்ற சபையேயன்றி சாதிக்கின்ற சபை அல்ல என்ற கருத்தும் உண்டு, என்றார்.

''தொழில் வாய்ப்பைக் கருதி வெளிநாடுகளில் தொழில் புரியும் இலட்சியப் பற்றுள்ள எமது இளைஞர்கள் உலக நாடுகளில் மேற்கொள்ளும் பிரசாரமும் எமக்குக் கிடைத்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் உலக அரங்கில் தமிழீழம் பெறவழிவகுத்துள்ளன.

''இலங்கைத் தமிழர்களின் பிரச்னை. உலகநாடுகளிலுள்ள மக்களால் அறியப்பட்ட பிரச்னையாக வளர்ந்துள்ளது. இவற்றைவிட ஐ. நா. மன்றத்தின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச மன்னிப்புச்சபை; சர்வதேச ஜூரர்கள் சபையும் அக்கரைகாட்டத் தொடங்கியுள்ளன. அவர்களது பிரதிநிதிகள் 4 தடவை இங்குவந்து பிரச்னையை நன்கறிந்து அறிக்கையை இலங்கை அரசிற்கு சமர்ப்பித்துள்ளன. உலகிலுள்ள பல்வேறு இனமக்களும் இலங்கை தமிழர்களுக்கு பல பிரச்னைகள் உண்டென்பதை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனல் அவர்களது பிரச்னைக்கு ''தமிழ் ஈழம்'' தான நிரந்தர தீர்வென்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். எனவே எமது இலட்சியத்தை வென்றெடுக்க நேசநாடுகளின் ஆதரவைப் பெற்றால் மட்டுமே நமது விடுதலையை வென்றெடுக்க முடியுமென்றார்.

[வெ-செ]

## கிராமோதயசபைத் தலைவர் தெரிவு

கிராமோதய சபைத்தலைவர் தெரிவு பிரதமருக்குப் புகார்'' என்பது பற்றி 12 4-82ம் திகதிய ஈழநாடு பத்திரிகையில் 8-வது பக்கத்தில் 1-ம் கலத்தில் வெளியான செய்திபற்றி 7-3-82ம் திகதி நடைபெற்ற தலைவர் தெரிவில் பங்குபற்றியவர்கள் என்றமுறையில் பின்வரும் உண்மையான தகவல்களை தங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கும் வண்ணம் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

1. குறித்த பத்திரிகையில் பருத்தித்துறை உதவி அரசு அதிபரினல் 3 சங்கங்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு கடிதம கொடுக்கப்பட்டதாக பிரசுரிக்கப்பட்டுள்ளது ஆனல் உண்மையில் குறித்த 3சங்கங்களில் திரு. பி. அந்தோனிமுத்து என்பவர் மட்டும் ஏதோ ஒரு கடிதத்தினை அன்றைய தேர்தல் அதிகாரியான விசேட சேவை உத்தியேசகத்தரிடம் சமர்ப்பித்தார். மற்றைய இரு சங்கங்களும் உதவி அரசு அதிபரின் கடிதங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. அந்தோனிமுத்துவின் கடிதத்தினைப் பார்வையிட்ட தேர்தல் அதிகாரி இந்த 3 சங்கங்களுக்கும் தன்னால் கடிதம் அனுப்பப்படவில்லை என்றும் ஆதலால் இதனை ஏற்றுக்கொள்வதற்கு ஆட்சேபனை எதுவும் உண்டா? என்று வினவியபோது பெரும்பான்மை அங்கத்தினரின் ஆட்சேபனையை ஏற்றுக்கொண்ட தேர்தல் அதிகாரி குறித்த 3 சங்கத்தலைவர்களையும் தலைவர் தெரிவில் பங்குபற்றுது இதர நிகழ்ச்சிகளில் பங்குபற்றலாம் என்றும் பணிப்புரை வழங்கினர். இதற்கமையவே தலைவர் தெரிவு நடைபெற்றது.

2. இன்னும் உங்கள் பத்திரிகையில் காட்டப்பட்டவாறு விசேடசேவை உத்தியோகத்தர் உதவி அரசு அதிபரின் பணிப்பின்பேரில் முன்னர் (7-3-82) நடைபெற்ற தலைவர் தெரிவு இரத்துச்செய்யப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. குறித்த விசேட சேவை உத்தியோகத்தரால் 7-3-82ம்திகதியதலைவர்தெரிவு ரத்துச் செய்யப்பட்டதாக எந்த அங்கத்தினருக்கும் அறிவிக்கவில்லை.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் கூட்டுறவு தவறணைமுறை

## ப.பொ.அ. சபைத்தலைவர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவரும், வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளருமாகிய திரு. க. நடராசாவை சந்தித்துக் கேட்டுக்கொண்டதன்பேரில், முல்லைத்தீவு மாவட்டத்தில் கூட்டுறவுத் தவறணை முறை அமைப்பது தொடர்பான விசேட கூட்டமொன்று வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. க. நடராசா உரையாற்றுகையில்: ஒருசில தனிப்பட்டவர்களின் சுரண்டல் நடவடிக்கைக்கு இனியும் அப்பாவிச் சீவல் தொழிலாளர்கள் பலியாகக்கூடாதெனவும், யாழ்ப்பாண மாவட்டத்தில் வெற்றிகரமாக இயங்கிவரும் கூட்டுறவுத் தவறணை முறையை முல்லைத்தீவு மாவட்டத்தில் அமுலாக்குவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தன்னாலியன்ற உதவிகளை செய்வதாயும், இதற்கு முதல் நடவடிக்கையாக முல்லை மாவட்டத்திலுள்ள சகல சீவல் தொழிலாளர்களும், மற்றும் சமூகநல ஸ்தாபனங்களும தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்குவதோடு, அதை மேலிடத்திற்கும் தெரியப்படுத்த வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு கூட்டுறவு ஆசக உதவி ஆணையாளரும், சமாசத் தலைவர் திரு. சு. நடேசுவும், மற்றும் கூட்டுறவு அதிகாரிகளும், சமூகநல ஸ்தாபனங்களின் பிரமுகர்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை வழங்கினர்.

## திருநெல்வேலி இ.வா.சங்கத்திற்கு ரி. வி. அன்பளிப்பு

[திருநெல்வேலி]

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்திற்குப் பெறுமதிமிக்க தொலைக்காட்சிப்பெட்டியொன்றை சங்க உறுப்பினரான திரு. பாலசுந்தரம் தேவகுமார் அன்பளிப்புச் செய்துள்ளார். தமது தந்தை அமரர்

(8ம் பக்கம் பார்க்க)

## பிரமுகர்களின் பிரயாணப் பைகள்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்கு அல்லது வெளிநாட்டிலிருந்து உள்நாட்டுக்குள் பிரயாணம் மேற்கொள்ளும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எம். பிக்கள், பிரமுகர்கள், அவர்கள் தம் மனைவிமார் ஆகியோர் தமது பிரயாணப்பைகளை எங்கள் பகுதியினரிடம் தன்னிச்சையாகத்திறந்து காட்டவேண்டும் என கேட்கப்படவிருக்கின்றனர். இதுபற்றி அரசு கொள்கைத்தீர்மானம்ஒன்றை எடுத்திருப்பதாகத் தெரிகின்றது.






285

# இப்படியும் நடக்கிறது

அகில உலக இந்துமாநாடு நாளை ஆரம்பமாகிறது.

வெளிநாட்டு அறிஞர்கள், பிரதிநிதிகள், பார்வையாளர்கள் 'மளமள' என்று கொழும்பு நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

இன்று செவ்வாய்க்கிழமையுடன் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவருமே கொழும்புவந்து சேர்ந்துவிடுவார்கள் என்று மகாநாட்டு உயர்வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

இந்த நிலையில் —

யாழ்ப்பாணத்தில் உள்ள பலருக்கு — முக்கிய பிரமுகர்களுக்கு — நேற்றுவரை அழைப்புக்கூட கிடைக்கவில்லை.

சிலர் ஐம்பது ரூபா செலுத்தி, புகைப்படம் ஒட்டி, பத்திரங்கள் அனுப்பியவர்கள்; வேறுசிலர் யாழ்ப்பாணத்தில் 'நான்குபேரால்' மதிக்கப்படுபவர்கள்; மேலும் சிலர் தொண்டர்கள். இவர்களுக்கும் அழைப்பு வந்து சேரவில்லை!

இந்துமகாநாட்டில் கட்டுரை ஒன்று வாசிப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்டு, 'தங்குமிடம் - சாப்பாடு' வசதிகள் அளிக்கப்படும் என்று தந்திமூலம் அறிவிக்கப்பட்டவருக்கும் நேற்றுவரை அழைப்பிதழ் கிடைக்கவில்லை!

இத்தனைக்கும் மத்தியில்; மகாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சியில் ஆசியுரை வழங்குவதற்குக் கலந்துகொள்ளும் ஒரு கௌரவப்பிரமுகருக்குக்கூட நேற்றுவரை அழைப்பிதழ் கிடைக்கவில்லை!

அதிர்ஷ்டவசமாக நேற்றுப்பகல் கொழும்பிலிருந்து தொலைபேசி அழைப்பு இவருக்கு வந்தது.

''அழைப்பிதழ் கிடைக்கவில்லை என்று மனம்வருந்த வேண்டாம். சுருக்கமான சிறப்புஉரை தயாரிப்புடன் கொழும்பு வந்துசேருங்கள்; எல்லாச் செலவுகளும் கொழும்பில் தரலாம்...'' — இது 'கொழும்பு' கூறியது.

''எல்லாம் நன்மைக்கே'' என்று கூறிக்கொண்டே அவர் நேற்றிரவு பஸ்ஸில் கொழும்பு பயணமானார்.

'ஊடுருவி'

# விடுதலை இயக்கத்துக்கு இலங்கை அளிக்கும் ஆதரவு

## யாஸிர் அரபாத் நன்றி கூறுகிறார்

குவைத், ஏப். 19

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் போராட்டத்துக்கு இலங்கை தொடர்ந்துஅளித்து வரும் ஆதரவுக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஏ.ஸி. எஸ். ஹமீத்திடம் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜனுப். யாஸிர்அரபாத் நன்றி தெரிவித்துள்ளார்.

ஜனுப்ஏ.ஸி.எஸ். ஹமீத் மத்தியகிழக்குப்பிரச்னைக்குத்தீர்வு காணும் பொருட்டு குவைத்தில் நடைபெற்ற உச்சி மகாநாட்டில்பங்குபற்ற வந்திருந்தபோதே யாஸீர் அரபாத் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஏ.ஸி எஸ். ஹமீத் இங்கிருந்து இன்று துருக்கி பயணமானார். இலங்கையின் சுதந்திர வர்த்தகவலயத்தில் துருக்கியும் சில தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அமைச்சர் ஹமீத் முயற்சிகள் மேற்கொள்வார் என்று செய்திகள் தெரிவித்தன. (கு)

## சமத்துவ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தகர்த்தெறிந்த பாரதி, ஒய்ந்திருக்கலாகாதென்றும், உழவுக்குப் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில் உண்டுகளிப்போரை நிந்தனை செய்வோம் எனவும் தமது சிந்தனை நுட்பத்தினுலும, கவித்திறமையினுலும் எடுத்துகாட்டினுன் என்ருர். அவர் மேலும் பேசுகையில் மணிபல்லவ கலாமன்றத்தின் சேவையைப்பாராட்டியதுடன், இம் முத்தமிழ் விழாவின் மூலம் நயினை மக்கள் பண்பாடாகவும், போட்டி, பொருமை அற்ற ஒற்றுமையாளராகவும் வாழும்நிலை ஏற்படும் எனவும, அதனை மக்கள் செயலில் காட்டுவார்கள் என்றும் கூறினுர்.

### பொன்னுடை போர்த்திக் கௌரவம்

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி.எல். பற்றிக் பேசும்போது மணிபல்லவ கலாமன்றத்தின் கலைப்பணி இனிமேலும் தொடர்ந்து நடைபெறவேண்டும் எனக் கேட்டுச்கொண்டார். அவரின் ஆசியுரையைத் தொடர்ந்து நயினுதீவின் கலை, கல்வி, சமய, சமூகப் பணிகளின் பொருட்டு திரு. க. இராமசாமிப்பிள்ளை, திரு. வே.க.த. கிருஷ்ணசாமி, திரு. ச. நா. கந்தையா, திரு. சி. கந்தப்பு, திரு.வே. கந்தையா, வைத்திய கலாநிதி த. சோமசேகரம் ஆகியோர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தனுல் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். இதனைத்தொடர்ந்து இடம்பெற்ற சிறப்புமலர் வெளியீட்டின் முதற் பிரதியை திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் பெற்றுக்கொண்டார்.

20 வது ஆண்டு நிறைவு விழா இத்துடன் முடிவடைய பாரதி நூற்றுண்டுவிழா நிகழ்ச்சிகள் வித்துவான் சி. குமாரசாமி தலைமையில் ஆரம்பமானது.

### கலாநிதி வித்தியானந்தன் உரை

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சு.வித்தியானந்தன் ''விடுதலையில் பாரதியின் பங்கு'' என்ற பொருளில் சொற்பெருக்காற்றுகையில் கடந்த ஆண்டில் இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் பற்றியும் அவற்றின் விளைவுகள் பற்றியும் எடுத்துச் சொன்னுர். ''போச்சுது போச்சுது பாரதநாடு, போச்சுது நல்லறம் போச்சுது வேதம்'' என விதுரன் விதைந்துரைத்தவற்றை ஞாபகப்படுத்தி இன்றைய ஆட்சியை விமர்சித்தார். ''பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாஸ்திரங்கள்'' என்று கூறிய பாரதி ஓரஞ்செய்திடாமே, தர்மத்தில் உறுதிசெய்திடாமே, சோரம்போகிடாமே ஊரையாளும் முறைமைபற்றியும் சொன்னுன் என்ருர்.

மேலும் அவர் பேசுகையில்; தனிமனிதசுதந்திரம் மதிக்கப்படக் ''காணிநிலம் வேண்டும் அங்கே மாளிகை கட்டித்தர வேண்டும் என்று சொன்னுன் பாரதி பாரதி பாரதத்தின் விடுதலைக்கு எவ்வாறு பங்காற்றினுனே அவ்வாறே ஈழத் தமிழரும் தமக்கெனத் தனிப் பிரதேசம் பெறுவதற்கு முனைந்துவருகிருர்கள். அவர்கள் கோரிக்கை நியாயமானது; நிச்சயம் நிறைவேறும் 'என்று ஆணித்தரமாக அடித்துக் கூறினுர்.

### பரிசுகள்

தொடர்ந்து பாரதி நூற்றுண்டு விழாவை யொட்டி மணிபல்லவ கலாமன்றத்தினுல் நடாத்தப்பட்ட பேச்சு, கட்டுரைப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து கவியரங்கம், நடனம், நாடகம் ஆகியனவும் நிருத்தியகேசரி கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் நாட்டியாஞ்சலியும் இடம்பெற்றன.

### இரண்டாம் நாள் விழா

இரண்டாம் நாள் கலைவிழாவை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்த வவனியா உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் பேசும் பொழுது மன்றத்தின் பணியை வெகுவாகப் பாராட்டினுர். இதனைத் தொடர்ந்து வித்துவான் க. குகதாசன் தலைமையில் நடைபெற்ற நயினை முதுமைப் பெரியோர்கள் பங்குபற்றிய ''மகாபாரதம்'' என்ற பொருளிலான இலக்கியக் கருத்தரங்கு அன்றைய விழாவைச் சோபிக்கவைத்தது. மற்றும் வீரகேசரிசெய்தி ஆசிரியர் திரு. டேவிட்ராஜு தலைமையிலான பட்டிமன்றம், செஞ்சிற் கச்சேரி, நாடகங்கள் ஆகியனவும் நடைபெற்றன. மன்ற உபதலைவர் த. இலங்கைநாதன் தலைமையில் நடைபெற்ற இரண்டாம் நாள் விழாவில் மன்ற உப செயலாளர் கனக. உருத்திரகுமாரன் வரவேற்புரையாற்றினுர்.

## சிறுபான்மை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைத் தமிழர்களின் வரலாற்றில் முதல் தடவையாக யாழ். மாவட்டத்தின் பொருளாதார அபிவிருத்திக்கும் சிறுபான்மைத் தமிழர்களின் முன்னேற்றத்திற்காகவும் போராடிவரும் செயல்வீரன் ஒருவர் நாடளாவிய ரீதியில் மிகவும் உயர்ந்த பதவியான பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவராக நியமிக்கப்பட்டு இருக்கிருர்.

''இந்த நியமனம் பல வருடங்களுக்கு முன்னரே நடைபெற்றிருக்கவேண்டும். காலம் பிந்தி என்றாலும் இப்பதவி நியமனம் செய்யப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்கதும், மகிழ்ச்சியளிப்பதுமாகும். சிறுபான்மைச் சமூகத்தவரொருவர் இத்துறையில் போதிய அனுபவமும், ஆற்றலும் வாய்ந்த தகுதியான தலைவராகப் பதவியேற்றதைப பாராட்டாமல் இருக்க முடியாது'' என்ருர்.

இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திசபைத் தலைவர் திரு. கே. நடராசா பேசுகையில், ''சிறுபான்மைச் சமூகத்தவர்கள், தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் பலவித இன்னல்களைஅனுபவித்துவந்த போதிலும், தமிழர் விடுதலை இயக்கங்களில் சிறுபான்மைச் சமூகத்தவர்கள் பார்வையாளர்களாக அல்ல, பங்காளர்களாகவே இருக்கின்றனர். எனது அரசியல் கொள்கை வேருக இருந்தபோதிலும் அதனைப் பொருட்படுத்தாது ஒரு சமூகத்தைக கௌரவிக்கும் வகையிலும், உண்மையான பனம் பொருள் அபிவிருத்தியை நாம் காணக்கூடிய வகையிலும் என்னைப் பனம் பொருள் அபிவிருத்தி சபைக்குத் தலைவராக நியமித்துச் சரித்திரம் படைத்த பிரதேச அபிவிருத்தி அமைச்ச திரு. செ. இராசதுரைக்கு நான் நன்றி செய்யக் கடமைப்பட்டவன். அதேநேரத்தில் நான் பாராளுமனற உறுப்பினர்கள் அனைவரும் அங்கீகரிக்கும்வகையில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு செயற்படுத்தவுள்ளேன்'' என்று அவர் கூறினுர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை பரிசுகளை வழங்கினுர்.

## திருநெல்வேலி...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பாலசுந்தரத்தின் ஞாபகார்த்தமாக இத் தொலைக்காட்சிப் பெட்டியை அவர் உபகரித்துள்ளார். நாளை புதன் மாலை நடைபெறும் பொதுவைபவத்தில் சங்கத்தலைவர் டாக்டர் எஸ். நடராசாவிடம் இது கையளிக்கப்படும்.

இச்சங்க வளர்ச்சிக்காக உழைத்த அமரர் பாலசுந்தரம் 20ஆண்டுகளுக்கு முன்னர் இச்சங்கத்திற்கு வானெலிப்பெட்டியை அன்பளிப்புச் செய்தது குறிபிடத்தக்கது.


கார் விற்பனைக்கு

11 ஸ்ரீ 8223 டற்சன் சணி 120

பொக் லாம்ப் மொடல் 1977.

குமாரன் டூரிஸ்ட் இன்,

67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

2912 தொலைபேசி: 7753

V.R.V. போக்குவரத்துச் சேவை வழங்கும்

புதிய உல்லாச பஸ் சேவை!

கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு

தினசரி இரவு 8-00 மணி கொழும்பு - யாழ்ப்பாணம்

தினசரி இரவு 8-00 மணி யாழ்ப்பாணம் - கொழும்பு

கண்ணியமான பாதுகாப்பு பஸ் சேவை

ஒருவழிப் பயணக் கட்டணம் ரூபா 60/- மட்டுமே

கொழும்பில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

| 1 | 2 | 3 |
|---|---|---|
| கிறீன்லண்ட் ஹோட்டல், பம்பலப்பிட்டி, தொலைபேசி: 85592, 81986 | V. R. வடிவேற்கரசன், 271, செட்டியார் தெரு, கொழும்பு—11 தொலைபேசி இலக்கம்: 34800, 32540 | அஜந்தா ஹொட்டல் லிமிட் 125, ஒல்ஹொட் மாவத்தை கொழும்பு தொலைபேசி இலக்கம்: 32769, 28089 |

யாழ்ப்பாணத்தில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

| 1 | 2 |
|---|---|
| V. R. V. ட்ரான்ஸ்போட், சேகரம் கட்டிடம், 188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: இல: 8162 | றிக்கோ சுவீட் அன் கிறீம் ஹவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம்: 464, 7889 |

பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு பஸ் பம்பலப்பிட்டி, கிறீன்லண்ட் ஹோட்டலிருந்து இரவு 7—00 மணிக்குப் புறப்பட்டு நேரே செட்டியார் தெரு கோவிலடிக்கு வந்து, அங்கிருந்து இரவு 8—00 மணிக்குப் புறப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பிரயாணிகள் மேலதிக கட்டணமின்றி வெள்ளவத்தை வரை செல்லலாம்

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு வழமைபோல காலை 6—00 மணி சேவை நடைபெறுகின்றது.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper. [illegible] the General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8186.